1980 பிப்ரவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—''தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1980) ஆய்வுக்கு எடுத்துககொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்மபற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1980) நிறைவேற்றப்பெற வேண்டும்''
என்று மொழிகிறேன்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(இ) பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர் களே, ''தமிழ்நாடு, 1980ஆம் ஆண்டு பொதுப்பொறுப்புக் கழகங் கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்முடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1980) அறிமுகம் செய்யப்பெற்று ஆய் வுக்கு *எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்'' என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

---

*1980 பிப்ரவரி 7-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது.

பிரிவு-5.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''பிரிவு 5 இச் சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

THE HON. THIRU S. D. SOMASUNDARAM: Sir, I move the following Amendment

''In clause 5, in New Sub-Section (2), *omit* the word "Second''.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 5, திருத்தப்பெற்றப்படி, நிறைவேற்றப்பெற்றது,

பிரிவு 6 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு-1.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி —

"பிரிவு 1 இச் சட்டமுன்வடிவினை உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

THE HON. THIRU S. D. SOMASUNDARAM: Sir, I move the following Amendment:

"In clause 1, *omit* the word ''Second''.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பொதுப்பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/1980) திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று ,சட்டமுன்வடிவு, திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப் பெற்றது.